(இ) நடைபெறவிருக்கின்ற மக்கள் தொகைக் கணக்கெடுப்புப் பணி மற்றும் பேரவை வாக்காளர் பட்டியல் திருத்தம் ஆகியவற்றைக் கருத்தில்கொண்டு, முந்திய அரசு விதித்துள்ள தடையின் காரணமாக இதுகுறித்த செயற்குறிப்புக்கள் ஒத்திப்போடப் பட்டுள்ளன.

THIRU T. MARTIN : May I request the Hon. Minister to tell us whether this decision was taken by Government after getting the consent of the Municipal Council of Madurai or without getting the consent of the Municipal Council of Madurai?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : மதுரை நகராட்சி மன்றம் இந்தத் திட்டத்தை அமல் நடத்த வேண்டும் என்று தீர்மானங்கள் நிறைவேற்றி அனுப்பியிருக்கிறது. 27—1—70 தேதியில் கூட, தீர்மானத்தின் மூலம், அரசின் முடிவுகளை மறுபரிசிலனை செய்ய வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள்.

அரியலூர் ஊராட்சி ஒன்றிய ஊழியர்கள் கூட்டுறவு கடன் வழங்கு சங்கம்.

*26 வினா—திரு. ஆர். கருப்பையா : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரியலூர் பஞ்சாயத்து யூனியன் ஊழியர்கள் கூட்டுறவு சிக்கன சேமிப்பு கடன் நாணயச் சங்கத்தில் நடைபெற்ற பைலா திருத்தம் பதிவாளரால் அனுமதிக்கப்பெற்றும் அதை அமல் நடத்தக்கூடாது என்று தமிழக அரசு தடை விதித்துள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : இல்லை.

திரு. ஆர். கருப்பையா : தலைவர் அவர்களே, அரியலூரைச் சேர்ந்த பஞ்சாயத்து யூனியன் ஆசிரியர் கூட்டுறவு சிக்கன சேமிப்பு கடன் நாணயச் சங்கம் கடந்த ஒன்றரை ஆண்டுக் காலமாக செயல்படாமல் இருக்கிறது. இதுபற்றி அரசாங்கத்திற்கு ஏதாவது தகவல் வந்திருக்கிறதா? இனிமேலாவது அந்தச் சங்கம் செயல்பட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவர் அவர்களே, இந்தக் கூட்டுறவுக் கழகம் செயல்பட்டுக் கொண்டுதான் இருக்கிறது. இதைப்பற்றிய ஒரு வழக்கு ஹைகோர்ட்டில் இருக்கிறது.

தஞ்சை மாவட்டத்தில் தவிட்டு எண்ணெய் ஆலை.

*27 வினா—திரு. பெ. மலைச்சாமி : மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில் தவிட்டு எண்ணெய் ஆலை அமைப்பதற்குரிய செயற்குறிப்பு ஏதேனும் உண்டா?

(இ) ஆம், எனில், எப்போது நிறுவப்படும்?